தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. VI.—No. 31.] MADRAS:—SUNDAY JULY 31, 287. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

மனோதத்துவம்.
நியாயப்பிரமாணங்கள்.
மோக்ஷவழிபாடு.
வினையும்விதியும் முறணியமை
கடிதம்.
வர்த்தமானசங்கிரகம்.

அறிக்கை.

சந்தாக்களையும், பத்திரிகைவேண்டி
எழுதிக்கொள்ளுங்கடிதங்களையும்
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிறாஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரைக்குநேராய்
அனுப்பவேண்டும்; அனுப்பாவிட்டால், பத்திரிகை
கிடைக்கமாட்டாது.

அறிக்கை.

மதிராஸ் சிக்கியுலர் சோசைட்டி புத்தகசாலை.

இதில் இங்கிலீஷ் சுவக்கியான புத்தகங்களும், சாஸ்திரங்களுமல்லாமல், அடியில் கண்டிருக்கிற தமிழ்ப் புத்தகங்களும் அகப்படும்.

மெய்யறிவு.

பாகம்.		விலை—பை.
1-வது.	புலால்—கொலை—மறுத்தல்.	,, 3
2-வது.	ஆத்துமா அழிவில்லாததா !	,, 6
3-வது.	அபிமானமென்பதென்ன !	,, 4
4-வது.	நல்லொழுக்கத்திற்கு மறுமைப் பயனது சித்தாந்தம் அவசியமா?	,, 4
5-வது.	இயற்கையறிவும், பகுத்தறிவும்.	,, 5
1-வது.	இந்துசமயசாரவிளக்கம்.	,, 9
	சாதிசமயவாதம்.	,, 6

வைததனை யின்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும், ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள்கண்டுவாழ்வார்.

திட்டை யினியசொல்லாகவும், கூழை நெய்கலந்த சோறாகவும், கசப்பைதித்திப்பாகவும்,உள்ளது உள்ளபடி யறியாமல், மாறுபடக் கொள்பவன் புத்திமாருட்டக் காரணகத்தானிருக்கவேண்டும். பதார்த்தத்தின் உண்மையையே யறியமாட்டாதவன் மெய்ப்பொருளாகிய கடவுளை எவ்வாறு காண்பனோ? இழிவான மாயையை உயர்வான பரமாக எண்ணுவன். இந்தப் பாட்டை வியந்து சொல்லி, இத்தகைய குணங்கள் நாஸ்திகருக்கு அமையுமாவென்று ஒருவர் கேட்டனர். உள்ளது உள்ளபடி யறியுந் தெளிவுள்ள நாஸ்திகனுக்கு இப்பேய்த்தனமான குணம் ஒருக்காலும் அமையமாட்டாதென்பது உண்மையே. இது இருக்கட்டும். அப்படி கேட்டவர் அழுக்கு வஸ்திரம் தரித் திருந்த வேறொருவனைப் பார்த்துப் பரிகாசஞ் செய்தனர். இது என்ன மதியீனம்! கசப்பைத் தித்திப்பாகக் கொண்டவன்போல், மலினவஸ்திரத்தைச் சலவை செய்த சரிகைவேஷ்டியாகக் கொண்டிருப்பரென்று எண்ணிக் கொள்ளலாகாதா? குற்றம் பாராட்டுவதே யிவருக்கமைந்த குணம்போலும்.

மனோதத்துவம்.

உலகினில் நால்வகை யோனிபேதமா யெழுவகை தோற்றத்தியங்கு மனந்த வான்மகோடிகளும் அளப்பரும்பிறவி யல்லலுற் றுழலாவண்ணம் முத்தி நன்னெறியை யுணர்த்துவானுதித்த சமயங்களில் இந்துமதமானது ஆதிரவாய்க்கொண்ட கொள்கைகள் பலவற்றுள்ளும் சிறந்ததும், பிரதானமுமானது தேகம்வேறு தேகிவேறென்பதே. எப்போது தேகியாகிய ஜீவாத்மாவை இன்னதெனப்பிரித்து அதன் இலக்ஷணங்களை யுணர சாத்தியப்பட்டதோ அப்போதே ஜீவாத்மாக்களின் சமஷ்டி கூட்டத்தை பிரபஞ்சத்தினின்றும் பிரித்து பரமாத்மாவென கூறுதற்கு மிடமாயிற்று. உடலிற்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தாசம்பந்தத்தைப்பற்றி வைதிகிகளோடும் வேதாந்திகளோடும் ஆசங்கிக்கின் அவர்கள் மானிடர்களனுபவிக்கும் சாக்கிர சொர்ப்பன சுழுப்தியாகிய மூன்றவஸ்தைகளை தேகம்-தேகி இவற்றிற்குள்ள சம்பந்தத்தை தெள்ளிதிற்காட்டவல்ல திடமரு ஏதுக்களாயிருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். எப்படியென்னில் சாஸ்திரத்தில் ஜீவாத்மாவானது உடலுடன் ஒன்றுகி நடித்து சுகதுக்க பேதங்களால் துயர்ப்பட்டுமென்றும், சொர்ப்பனத்தில் உடலை ஒருபுடை விடுத்தும் சாக்கிராவஸ்தை வாசனையினுல் வேறுடலைத்தேடி வினைபலபுரிந்து இன்பதுன்பங்களுக் கிலக்காகியும் சுழுப்தி யவஸ்தையில் மட்டும் ஒன்றும் விகார மடையாமல் பதிந்திருப்பதால் அப்போது தான் விஷய வாசனைகளால் சிறிதும் சேஷ்டிக்கப்படாமல் சுசமாயிருக்கிறதென்றும், அப்படி ஜீவாத்மாவானது தன்னிலை தவறி வாசனசம்பந்தங்களாலேயே விலக்ஷணப்பட்டு தனக்கன்னியமானவைகளையெல்லாம் தன்னுதெனவே யபிமானித்து அல்லலுற்று வருகிறதென்றும் சொல்லுகிறார்கள்.

மேலும் இமையா நாட்டத்தவராகிய தேவர்களுக்கு சொர்ப்பன சுழுப்தி யவஸ்தைகளில்லாமையாலும், மானிடர்க்குக் கீழ்ப்பட்டனவாகிய மிருகாதி செந்துக்களுக்கு அறிவுங் குன்றி யிருக்கின்றமையாலும் இவைகள் ஜீவாத்மா பரமாத்மாவின் இலக்ஷணத்தை அறிய அசக்தப்பட்டுப் போயினவென்றும் அதனுல் பிறவியைநீத்து சைதன்யத்தோடு கலந்து முத்திபெறுதற்கு கூடாமற்போயிற்றென்றும், மனிதனே பஞ்ச அறிவு மூன்றவஸ்தைகளையும் பெற்றிருப்பதால் ஜீவாத்ம பரமாத்மாவின் இலக்ஷணத்தை யுணர்ந்து முக்திவழியை நாடவுமருகனுயிருக்கிறுனென்றும் தெரியவருகிறது. ஒருவன் தன்னிடத்துள்ள ஜீவாத்மாவை பாசத்தின் காரணமாக கவர்ந்துள்ள அன்னியவிஷயங்களையெல்லாம் பரிசோதித்து கழித்து நீக்கவே ஜீவாத்மாவானது சுவயமாய் வெளிப்படுமென்றும், அதைக்கண்டுணர்தலே பரமாத்மாவின் தெரிசனமென்றும், முத்தியென்றும் வேதாந்திகளால் தெரியவருகிறது. ஆகையால் நம்முடைய அவஸ்தாத்திரயங்களைக் களைந்துபார்த்து ஜீவாத்மாவை கண்டறிவது யாவருக்கு மின்றியமையாக் கடனுயிருக்கிறது.

ஒவ்வொருவருடைய மனமும், தேகமும் தொழிற்படுதற்கு அடைந்திருக்கு மாற்றலானது பழக்கத்தால் வளர்ந்துவந்திருக்கின்றதேதவிர வேறில்லை. சிசுவாயிருக்குங்காலத்து துரும்பை யெடுக்க அசக்தமாயிருந்த கைகளாலேயே, வரவர பழக்கத்தால் வலிவுபெற்றுவந்து மனிதன் பூரணபிராயத்தில் தன்னிலும் பலமடங்கு பளுவுள்ள வஸ்துக்களையு மெடுக்க ஆற்றலுடையவனுகின்றுன். அப்படியே மனமும் அறிந்துகொண்டதெல்லாம் சிசுப்பருவ முதல் விருத்தபரியந்தமுள்ள பழக்கத்தாலேயேதான். சிசுவாயிருக்கையில் அந்த ஜீவன் தன்னைத்தவிரப் பிறிதொன்றையு மறியவில்லை. அதன் மனதில் யாதொருஎண்ணமு முதிக்கவில்லை. ஆகையால் சித்தம் சுத்த சமாதானத்தோடே யிருக்கிறது. அதற்கிருந்த பிரஞ்ஞையெல்லா மதன் தேகதத்துவபேதங்கள் சம்பந்தப்பட்டமட்டிலேதான். அந்த சிசுவினுக்குப் பசிக்கும்போதும், யாதேனும் வலி தோன்றும்போதும், அப்போது அதன் தேகதத்துவங்கள் வேற்றுமை யடைந்ததால் உண்டான பிரஞ்ஞையே அதற்கிருந்த

து. எவனேனு மடித்தாலும், சீதோஷ்ண வஸ்துக்களை அதனருகில் வைத்தாலும், அதற்கு பிரஞ்ஞை யுண்டாகின்றது. அப்போதும் அது ஸ்பரிச அறிவு வாயிலாய் தன் தேகதத்துவ மாறுபாட்டை யுணர்ந்ததேதவிர, தனக்கன்னியமான எந்தவஸ்து யாதுகாரணத்தால் பிரஞ்ஞை மூட்டினதென்று அறியக்கூடவில்லை. நமக்கு பஞ்ச அறிவுகளு மில்லாமற் போமாகில் நாம் என்ன பரிதாபமான நிலைமையி லிருப்போமென்பதை ஒவ்வொருவரும் யூகித்துக்கொள்ளலாம். ஆகையால், பஞ்ச அறிவினாலேயே நம்முடைய தேக தத்வங்களையும், பிரபஞ்சத்தில் நமக்குப் புறம்பாயுள்ள ஒவ்வொரு வஸ்துவின் தத்துவங்களையும், உணர்தற்கு திறமை யுடையவர்களாயினோம். எப்படியென்னில், ஒருவஸ்துவினுடைய நிறத்தை சட்சு இந்திரியத்தாலும், அந்த வஸ்துவின் மழமழப்பு அல்லது சரசரப்பான தன்மையையும், மெது அல்லது கடினமான தன்மையையும், அதன் பளுவையும், துவக்கிந்திரியத்தாலும், அதன் ரூபத்தை துவக்கு சட்சு இந்த இரண்டு இந்திரியங்களாலும், அந்த வஸ்துவினு லுண்டாகும் தொனியை சுரோத்திரேந்திரியத்தாலும் அதன் சுவையை சிங்குவை இந்திரியத்தாலும், அதன் கந்தத்தை ஆக்கிராணேந்திரியத்தாலு மறிந்து கொள்கின்றோம். ஞானேந்திரியங்களின் வாயில்களுக்கும் புலனுணர்வு ஸ்தானத்துக்கும் (Sensorium) அறிவுஸ்தானத்துக்கும் (Cerebrum) தொடர்பாய் நரம்புகளாகிய தாதுக்கள் தொடுக்கப்பட்டிருப்பதாலும், ஒவ்வொரு வஸ்துவும் நம்முடைய புலன்களை யதுஷ்டிப்பதாலும், அந்தந்த வஸ்துவுககுத் தக்கவாறு தாதுக்க ளியக்கப்பட்டு புலனகளை யுணரும் ஸ்தானத்தினுணர்ச்சியைத் தருகின்றன. மேலு மந்த உணர்ச்சியின் காரியமாய் கபாலத்தி னடியி லுள்ள அறிவு ஸ்தானமானது (Cerebrum) எவ்வாறு மலின மடைந்ததோ அந்தப் பிரஞ்ஞையே நமக்கு ஒவ்வொரு வஸ்துவையும்பற்றி உண்டாகும் பாவனையு மாகிறது.

மேலும் நம்முடைய அறிவு ஸ்தானமானது அனந்த பேதமாய் மலினப்பட்டு வருவதே நம்முடைய பிரஞ்ஞைக்கு அவசியமாகவு மிருக்கின்றது. ஏனெனில், ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொரு புலனையும் ஒரேவிதமாக சேஷ்டிக்கவேண்டுமாதலால் அறிவுஸ்தானமும் ஒருவிதமாகவே சதாவாய் மலினப்பட்டு வரவேண்டியது. ஆகையால் ஜீவனுக்கு பேத உணர்ச்சி யின்மையால் பிரஞ்ஞையுமில்லை யெனல்வேண்டும். எப்படியென்றால் நாம் ஒளி இருள் ஆகிய இரண்டையும் பார்த்துள்ளேமாதலால், அவற்றிற்குள்ள பேத உணர்ச்சியாலேயே இது இருளென்றும், இது ஒளியென்றும் பகுத்துச்சொல்ல சக்தியுடையவர்களாயினோம். ஆனால் பிறந்தகாலமுதல ஒரே பரிமாணமுள்ள ஒளி அல்லது இருளிலேயே ஒருவன் வளர்ந்து வருவானாகில் அவனுக்கு ஒளி அல்லது இருளில் உலாவுகின்றோமென்னு முணர்வுமில்லையென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. பிறந்தகாலமுதல் அணுக்கூட்டத்தினிடையே உலாவுகின்ற நாம், அவற்றின் பளுப்பிரமாணத்தை யுணராதிருத்தலே போன்ற திருஷ்டாந்தமெனக் கொள்ளலாம். ஒருவன் சிரசில் சொற்பகனமுள்ள எந்த பதார்த்தத்தையாவது அவனறியாதிருக்கையில் வைப்போமாகில் உடனே அவன் உணர்ச்சி பேதத்தால் பிரஞ்ஞையடைந்து, ஏதோ கொஞ்சம் பளுவான ஒரு வஸ்து தன் சிரசிற் பொருந்தி யிருப்பதா யுணர்கின்றான். அந்த வஸ்துவை மீள வெடுத்துப் போடுவோமாகில், தன்மேல் பளுவான வஸ்து ஒன்றுமில்லையென்று சமாதான மடைகின்றானே தவிர, அணுக்கூட்டத்தில் பளுப் பிரமாணத்தை யுணரவில்லையே. ஆகையால் பிரஞ்ஞைக்குப் பேத உணர்ச்சி அவசியம் வேண்டுமென்பது விசிதமாகும்.

V.

(இன்னும்வரும்.)

நியாயப்பிரமாணங்கள்.

நாத்திகவாதிகளுக்கு மறுமைப்பலாபலன்கள் இல்லாமையினால் அவர்கள் எவ்வித அக்கிரமும் புரியலாமே, என சமயவாதிகள் வாயில் வந்தபடி நியாயவழுவாகப் பேசுகின்றார்கள். அப்படி பேசுவது நியாயமல்ல. நாத்திகவாதிகள் ஒழுகவேண்டிய ஒழுக்கத்தைப்பற்றி நிரீசுரவாத மந்திராலோசனை சபையார் நிர்மாணித்திருக்கிற சில விதிகளை இதனடியில் யாவருக்கும் விளங்கத்திட்டுகிறோம்.

விதிகள்.

நீங்கள் உங்கள் பூர்ண இருதயங்களோடும் உங்கள் பூர்ண மனதுகளோடும் இன்னதெனவறியாத கடவுள் என்னும் மொழியைப் பின் பற்றாதிருக்கக் கடவீர்கள்.

நீங்கள் தொழிற்படுத்திய எந்த சொரூபத்தையாகிலும், மேலே ஆகாயத்திலும், கீழே பூமியிலும், பூமிக்குக்கீழே ஜலத்திலுமுள்ள எந்தப்பொருளையாகிலும், தொழாமல் இருக்கக் கடவீர்கள்.

நீங்கள் பொய்யாமை, கள்ளாமையாகிய இவற்றின் விருதுக்கொடியை உடையவர்களாக இருக்கவேண்டும்.

உதிரக் கலப்பானவரையும், புருஷருக்கு இருபத்தைந்து பருவமும் கன்னிகளுக்கு பதினெட்டுப் பருவமும் செல்லுமுன்னும் மணம்புரியலாகாது. இவ்வித விவாகத்தினால் பலம்குன்றி பின்னடியாரின் பலமும் புத்தியும் குறைந்துவரும்.

கைம்மாதரும் புருஷரும் மறுமணம் புரிந்து கொள்ளக்கடவர்கள். வேகிறதிலும் புநர்விவாகத்தை பேற்றுக்கொள்ளுதல் நலம்.

எதை மற்றவர்கள் உங்களுக்குச் செய்யாதிருக்க நீங்கள் விரும்புகிறீர்களோ அதை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யாதிருப்பீர்களாக.

உயர்ந்தோரால்விலக்கப்பட்டவைகளும், தேகத்தைக் கெடுத்து புத்தியைத தாறுமாறாக்கித் தன்னையும், தன் குடும்பத்தாரையும் நாசப்படுத்தும்படியானவைகளாகிய மதுபானம், சூதாடல் முதலிய துர்க்கிரியைகளை புரியாதிருப்பீர்களாக.

நீங்கள் விருத்தசேதனஞ் செய்யாமலும், நாசி, செவி, மிடறு ஆகிய இவைகளில் இரந்திரஞ்செய்யாமலும், அடையாளமாக எழுத்துகளை (பச்சைகுத்துதல்) உங்கள்மேற்பதியாமலும், சிரசையும், பாதங்களையும் இறுக்கிக்கட்டி விகாரப்படுத்திக் கொள்ளாமலும் இருப்பீர்களாக. (விருத்தசேதனம் - இதை மொகம்மதியர் சுன்னத் எனக்கூறுவர்.)

சீவபிராணிகளின் உடலை தக்கதேல் இஷ்டமுள்ளவர்கள் உண்ணலாம்; பிரியமில்லாதவர்கள் உண்ணாதிருக்கலாம்.

உங்களுக்கு நடுவுநிலைமையுடைய எல்லா மாந்தரிடத்திலும் மாசற்றவிசுவாசம் இருக்கக்கடவது. நீங்கள் எத்தேசத்து எச்சாதியாரிடத்திலும் சகோதரவாஞ்சையாய் இருக்கக் கடவீர்கள். சகோதரவாஞ்சை மலைமுடியிலிருந்து வழிந்து பெருகி யோடிவரும் அருவிபோலிருக்கிறது.

உங்களுக்குத் தீங்குசெய்தவர்கள் நாணும்படி அவர்களுக்கு நன்மையையே புரியுங்கள்.

நீதிவழுவா ஆளுகையே நீதிக்கு அழகாகையால், வறியோர் முகத்தை நோக்காமலும், வலியார் முகத்தை எண்ணாமலும் நீதியாகப் பிறருக்கு நியாயந்தீர்க்கக் கடவீர்கள். நீதியின்மேல் பசி தாகம் உள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்.

நீங்கள் மாயவித்தைகளைப் புரியாமலும், சுப அபசகுனங்களை உணர்த்தும் சகுனங்களையும், சுபாசுப காலங்களையும் பாராமலும், பேய்வித்தைக் காரரையும், மந்திரங்களையும், மந்திரக்காரரையும் மதியாமலும் இருப்பீர்களாக.

மாசற்ற எண்ணமும், சுத்தமானவார்த்தையும், குற்றமற்ற செய்கையும் உங்களுக்கு இருக்கக்கடவது.

இந்நியாயப் பிரமாணங்களினால் நீங்களே உங்களை சற்குணராக்கவேண்டுமேயல்லாமல், அதற்காக கடவுள் ஒருவர் இருக்கிறாரென்றும் அவரைநோக்கி ஜெபம் செய்யவேண்டுமென்றும் நினைக்கவேண்டாம்.

M. M.

மோக்ஷவழிபாடு.

(118 - வது பக்கத் தொடர்ச்சி.)

6. பத்திரம் என்பது :—பீஜத்தின்கீழ் ஜீவனிடத்து இருகால்பரட்டையும் வைத்து அவ்விரு பாதத்தையும் இருகையால் இறுகப்பிடித்து அசையாதிருத்தல்.

7. முத்தம் என்பது :—இடக்கால் பரட்டால் ஜீவனை அழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின் கீழுந்த விருத்தல்.

8. மயூரம் என்பது :—முழங்கை இரண்டும் உந்திபுறத்தி லழுந்த பூமியில் கை யூன்றி கால் நீட்டி தலைநிமிர்ந்திருத்தல்.

9. சுகம் என்பது:—சுகமும் திடமும் எவ்வாறு இருத்தற்கெய்துமோ அவ்வாறிருத்தல். இவையன்றி, இரு குதிசகாலும் ஜீவனிடத்து பொருந்த இருபுறவடியின் மீதிலும், இரண்டு அங்கையையும் சேர்த்து மார்பு நெறித்து தலை நிமிர்ந்திருத்தலாகிய குக்குடாசன முதலிய ஆசனங்களும் சிலவுள.

பிராணாயாமம்-2-வகை. அவை:—சகர்ப்பம. அகர்ப்பம்.

I. சகர்ப்ப மென்பது:—தியானத்துடன் மூச்சைப் பிடிப்பது.

2. அகர்ப்பமென்பது:—தியானமின்றி மூச்சைப்பிடிப்பது. இந்த இருவகையும இரேசக பூரக கும்பகமாம். இன்னும் பலவிதமாக இருக்கும்.

பிரத்தியாகாரமாவது:—(யோ) மனதை இந்திரிய விஷயங்களில் செல்லவொட்டாமல் லக்ஷயத்தில் நிறுத்துதல். (ஞா) சர்வம் பிரம்மமயமாகப் பார்ப்பதென பிரம்மநிஷ்டர்கள்சொல்லுதல்.

வேதத்தில்சொல்லிய நித்திய நைமித்திய காமியங்களை பிரம்மாராதனமென்று செயயுதல். தேகத்தை நானென்று நினைப்பதைத் தள்ளி சித்தாத்தமாவே நானென்று நினைத்திருத்தல்.

தாரணையாவது:—(யோ) தேகாகாசத்தை வெளி ஆகாசமாகவும், தேகவாயுவை வெளி வாயுவாகவும், தேக தீயை வெளித்தீயாகவும், தேக நீரை வெளி நீராகவும், தேக மண்ணை வெளி மண்ணாகவும், நினைத்திருத்தலும், பாதமுதல் முழங்கால்வரையில் பிருதிவு பாகம் பிரமனாகவும், முழங்கால்முதல் தொப்புள்வரையில், ஜலபாகம் விட்டுணுவாகவும், நாபிமுதல் மார்புவரையில் அக்கினி பாகம் உருத்திரனாகவும், மார்புமுதல் புருவம் வரையில் வாயுபாகம் மகேஸ்வரனாகவும், புருவம் முதல் சிரசுவரையில், ஆகாயபாகம் சதாசிவமாகவும் நினைத்திருத்தலும், மனதிறகுச் சந்திரன், காதுக்குத் திக்கு, தோளுக்கு விட்டுணு, வாக்குக்கு அக்கினி, குதத்திற்கு மிருத்யுவு, உபஸ்தத்திற்கு பிரஜாபதி, தொக்குக்கு வாயு, கண்ணுக்கு சூரியன், நாவுக்கு வருணன், மூக்குக்கு பூமாதேவி, புருஷனுக்கு அந்தரியாமி அதிஷ்டான தேவதை என்று புந்தியில் தரித்தலுமாம். (ஞா) தேகாதிபதி பிரபஞ்சமாகிய பஞ்சபூதங்களை மகா பூதங்களில் ஒடுக்கி, மகா பூதங்களை மாயையில் ஒடுக்கி, மாயையை ஆத்தும சொரூபத்தில் ஒடுக்கி, தான் சின்மாத்திரனென்று மனதில் தரிப்பதும், நான் தேகாதிகளுமன்று, அதற்கு உரித்தாகிய மாயையுமன்று, நான் சின்மாத்திரனென்று ஒடுங்கி நிற்பதும் பரம தாரணையாம்.

தியானமாவது:—(யோ) மனதை மூர்த்தி வடிவமாக்கி, மற்றொன்றிலும் பொருந்தாமல் செலுத்துதல். (ஞா) தேகாதீதமாயும் திருக்கு ரூபமாயும் இருக்கின்ற சின்மாத்திரத்தை நானென்று தியானிப்பது பரம தியானமாம். இப்படி தியானிக்கிறவனை சாக்ஷாத் பரமசிவனெனப்படும்.

சமாதியாவது:—(யோ) சீவனுக்கும் பரனுக்கும் ஐக்கிய பேதக்கியானம் பிறப்பதேயாம். (ஞா) நான் சாக்ஷாத் சிவரூபனாகையாலே, நான் தேகாதிகளல்லன். நான்பரமசிவனென்ற புத்தியும், பிரமாண்ட பிண்டாண்டங்களை தூல பஞ்சபூதங்களில் ஒடுக்கி, அந்த பூதங்களை அபஞ்சீகிருத பூதங்களில் ஒடுக்கி, அச்சத்தாதியாகிய தன்மாத்திரைகளை மாயையில் ஒடுக்கி, அம்மாயையை பிரத்தியேகாத்மாவில் ஒடுக்கி, அவ்வாத்மாவாகிய நானே பிரமம், நான் சமுசாரியல்லன், என்னைவிட வேறேயில்லை என்று அறிவதும், பிரணவ சொரூபமான பரமேஸ்வரனை மூன்று வருணங்களாக பாவித்து, அம் மூன்று வருணங்களையும், இருக்கு தைத்திரிய சாம ரூபங்களாக பாவித்து, நாதத்தை அதர்வண வேதமாக பாவித்து, அம்மூன்று வருணங்களையும், பிரமா விட்டுணு ருத்திரனாக பாவித்து, அந்த வருணத்துடைய நாதத்தை காரண ஈஸ்வரராக பாவித்து, அம்மூன்று வருணங்களையும் மூன்று அக்கினியாகவும், மூன்று லோகமாகவும், மூன்று அவஸ்தையாகவும், மூன்று ஸ்தானங்களாகவும், மூன்று காலங்களாகவும் பாவித்து, அகாரத்தை உகாரத்தில்ஒடுக்கி, உகாரத்தை மகாரத்தில் ஒடுக்கி, மகாரத்தை நாதத்தில் ஒடுக்கி, நாதத்தை, மாயையில் ஒடுக்கி, மாயையை சீவனில் ஒடுக்கி, சீவனே ஈஸ்வரன். அவனே நானென்று சாதிப்பதும் பரமசமாதியாம்.

யோகம் சாதிப்பது மனைவி முதலிய இல்லற சம்பந்தம் அனைத்துமின்றி துறவுபூண்டு, கற்பசாதனைசெய்து, அமுதம் இறக்கியுண்டு காயசித்தி பெற்றபின், பன்னிரண்டுகலை கொண்டு பாயும் வாசியை வசப்படுத்தி, சுவஸ்திகம் முதலிய ஆசனங்களில் இருந்து, பிராணவாயுவை இரேசித்து (மூச்சுவிட்டு) பூரித்து கும்பித்து (பிராணவாயுவை சமப்படுத்தி யடக்கல்) உபாதியை நீக்கி, உண்ணாக்கி, கண்டம், இதயம், நெற்றி, கபாலம். நாபி இவற்றில் ஒன்றில் சதாகாலம் சிந்தைவைத்து, ஐம்புலன் அடக்கி இருந்து சாதிப்பது. இப்படி சாதனைசெய்யுமிடத்தே சிறிது வழுவினால் வயிறு வெடித்து, கண்டம் விம்மி, கண்பிதுங்கி, தலை வெடித்து பிராணச்சேத மடைவதும், பிராணன் பிழைத்தபோதும் பஞ்ச புலன்கள் ஊறுபடுதலும், பைத்தியமுண்டாதலும், மீஹாச்சுர முதலிய ரோகங்கள் உண்டாதலும் இன்னும் பல கேடுகள் உண்டாதலுமாகிய வெகு மோசங்கள் அடைய யேதுவா யிருக்கும் என சிவயோகிகள் உறைத்தனரோ.

M. M.

(இன்னும்வரும்.)

வினையும் விதியும் முறணியமை.

இன்பமின்மையே துன்பம். இன்பத்தை யனுபவிப்பதே எல்லோருக்கு முள்ள நோக்கம். இத்தகைய ஆக்கத்தையே சதாகாலமும அனுபவிக்க விருப்புற்றிருக்குமவர் பலர்க்கும் இடையிடையே துன்பம் சம்பவிககின்றது. இவ்வாறு துன்பஞ் சம்பவிப்பதற்குக் காரணம்யாதென விசாரித்தல் இன்பத்தைக் காதலிப்போர் கடனாகும். இடையிடையே யுண்டாகும் இன்பதுன்பங்கள், பிரபஞ்சத்தின் கண் ணுள்ள பதார்த்தங்களின் பிரயோக பாவத்ததாகின்றன. பிரபஞ்ச பதார்த்தங்களொவ்வொன்றும் இன்பத்தையேனும் துன்பத்தையேனும் விளைக்கவல்லது. அவற்றால் விளையும் இன்பதுன்பங்கள் அப்பதார்த்தங்களின் பிரயோகவாற்றலா லென்க. பதார்த்தங்களை இன்பத்தின்பொருட்டே யுபயோகிக்காமல் துன்பத்தின் பொருட்டும் மக்கள உபயோகிப்ப தெனனவெனின், அறியாமையாலும், மானுஷீகமின்மையாலு மேவபட்டென்க. அறியாமை முன்னிட்டுபதார்த்தங்களினால் பழுதியற்றப்படுகின்றனவெனினும், அறியாமையால் பதார்த்த பிரயோகத்தின்கண் விளையும் துன்பம் மிகுந்யே. பதார்த்த பிரயோகவாற்றலால் விளையும் துன்பங்களை விலக்கவேண்டில், பதார்த்தங்களின் யுக்தாயுக்தங்களை யறியவேண்டியது ஆவசியகம். அறிந்தபின் பதார்த்தங்களை நற்பிரயோசனஞ் செய்யல்வேண்டும். துர்மார்க்கங்களில் ஓர் சிறிதும் பிரயோகிக்கப்படாது. ஆனல், பதார்த்தபரிசோதனையில் யதார்த்தமாய் பாடுபட்டு வருபவரொழிந்த மற்றைய மானிடர், துன்பத்திற்குக்காரணம் பதார்த்தங்களின் அபக்குவ பிரயோகமென வறியாது, வினையையும்விதியையும்காரணமாகக்கூறுகின்றனர். வினையென்றால்தன்வினையென்றும்பிறவினையென்றும்இருவகைப்படும். தன்வினையாவதுஒவ்வொருவனும்தத்தம்முன்பிறப்பில்செய்தஇதாயிதங்களின்பலாபலன்களெனப்பொருள்படும்.பிறவினையென்பது தாய்தந்தைகள் செய்த இதாயிதங்களின் பலாபலன்களாம். விதியென்பது அவரவர்செய்த இதாயிதங்களுக்கேற்ப பலாபலன்களை யவரவர்களுக்கு கடவுள நிர்ணயித்தல் எனப் பொருள்படும். இன்ப துன்பங்களுக்குக்காரணம் வினையாயின், இன்பதுன்பங்களை யனுபவிக்கவேண்டியது, வினையை யியற்றியதற்குக்காரணமாகவிருந்த தேகமா, அல்லது வினையின் பலாபலனாகிய இன்பதுன்பங்களை யனுபவிக்குந்தேகமா? எவ்வினையை எத்தேக மியற்றியதோ அத்தேகமன்று அவ்வினையின் பலாபலன்களாகிய இன்ப துன்பங்களை அனுபவித்தல்வேண்டும்? ஓர் தேகத்தால் இயற்றியவினையின் பலாபலன்களாகிய இன்பதுன்பங்களை வேறோர் தேகம் அனுபவிப்பதெங்ஙனம் கூடும்? இன்பதுன்பங்களுக்குக்காரணம் விதியாயின், விதிக்குக்காரணம்வினையும், வினைக்குத்தக்கவாறு பலாபலன்களை நிர்ணயஞ்செய்த கடவுளுமாகின்றனர். வினைக்குக் காரணம் தேகமாகினறது. தேகத்திற்குக்காரணம் கடவுளாகின்றார். ஆகவே சுகதுக்கங்களுக்குக்காரணம் விதியெனறால், கடவுளே சுகதுக்கங்களுக்குக்காரணராகின்றார். கடவுள் காருண்ணியராதலால் சுகத்திற்குக் காரணராவரோயன்றி துக்கத்திற்குங் காரணராகார். ஆகாராகவே சுகதுக்கங்களுக்குக் காரணம் விதியென்பது விருத்தமென்க. வினையும் விதியும்கூடி சுகதுக்கங்களை யியற்றுகின்றனவெனின், சுகதுக்கங்களை வினையின்றி விதியும், விதியின்றி வினையும் இயற்றவல்ல தல்லவெனவாகவேண்டும். ஆகவே சுகதுக்கங்களுக்குக்காரணம் வினையும், விதியும் என்றாலோ, வினை தேகத்தின்தொழில், விதி தெய்வத்தின்தொழில், தேகத்தின்தொழிலாகிய வினையியங்காதிருப்பதற்கிடமில்லையாயினும், எல்லாம்வல்ல தெய்வத்தின்தொழிலாகிய விதியியங்காதிருப்பது சாத்தியமன்றா? சாத்தியமாயின், தெய்வம் விதிக்காதிருக்கலாமன்றா? விதிக்காமலிருப்பின், தனியே யியங்கவல்லதல்லாத வினையொன்றும் இயற்றவல்லதல்லவன்றா! தெய்வம் சும்மாஇல்லாமையினாலேயே சுகதுக்கங்கள் விளைவதாகின்றன. ஆகவே சுகதுக்கங்களுக்குக்காரணம் கடவுளாகின்றாரேயொழிய தேகவியல்பாலாகிய வினையன்றென வெளிப்படையாகின்றது. ஆகவே சுகதுக்கத்துக்குக்காரணம் வினையும் விதியும் என்பது முறண்பட்டு, கடவுளென்பதும் அவரது காருண்யத்தாலும், சர்வவல்லபத்தாலும் பொய்பட்டு, அறி வறியாமையே நிலைநாட்டப்பட்டதென மேலையநியாயங்களால் கண்டுணர்வார்களாக.

D.

கடிதம்.

தத்துவவிவேசினியாந்தார்குழலேயென்றனது
சித்தத்தறுமைமயந்திரவே—பத்திமிகும்
உந்தைதனைக்கேட்டேயுலககனிலான்மாக்கள்
வந்தவிதஞ்சொல்வாய்மகிழ்ந்து.

இந்தவிஷயத்தில் எனக்கு நெடுநாளாய்ச் சந்தேகம். யானிதைப் பலரிடத்தும் கேட்டுத் தக்க விடை பெறாததுபற்றி வியாகூலங்கொண்டு, நீ சமயம் வாய்த்தபோது பேசுவை, அப்போது தெள்ளெனத் தெளிந்துகொள்வோமென் றிருந்தேன். ஆனால் நான் பத்திரிகை பார்க்கத்தொடங்கின நாண்முதலிதுபரியந்தம் இதுபற்றி நீ யாதோர் வார்த்தையும் புகல வெண்ணினையில்லை. சங்கைதீர்த்துக்கொள்ளவேண்டுவது என்கடமையாதலால் நின்னை நேரேகேட்கப் புகுந்தேன். மாதே! இதனை நிவர்த்திக்க நின்னையன்றி யெவருளர்? நான் பத்திரிகை வாங்கி வாசிக்க வாரம்பித்தது கொஞ்சகாலம். அதற்குமுன் னிதனைக்குறித்தேனுங் கூறியிருப்பினும் "அதனைப்பார்த்துக்கொள்க" வென்னாது இவ்வாரத்திலேயே தெளிவுற மறுமொழி தந்திடுவையாயின் எனக்குமட்டும் அன்று என்போன்ற புது கையொப்பக்காரரும் சந்தேகிகளுமாய் அநேகரிருப்பர். அவர்க்கும் உபயோகமாம். இக்கேள்வி உன்போன்ற அறிவாளர்க்கு இலேசாயிருப்பினும், என்போன்ற தெரியார்க்கு மிக்க பிரமையை விளைவித்திருக்கின்றதாதலால், என்னைமதித்து தக்க விடை யளிப்பாயென நம்பும்.

புதுவை
சுவஞானப்பிரியன்.
T. V.

வினா. ஒரு ஊசிமுனையில் எத்தனைபேர் தொங்கலாம்?
விடை. பூர்வகாலத்திலே ஒரு ஊசிமுனையில் ஒருவர் தொங்கினாராம். இக்காலத்தில் அதுவும் அசாத்தியம்.

வர்த்தமானசங்கிரகம்.

ஒட்டகமண்டிலே சென்ற சிலநாள் விடாது பெய்த அதிக மழையினால் பிராணச்சேதமும் சொத்து நஷ்டமு முண்டாயது. பைகாராவுக்கு போகிற மார்க்கத்திலே எட்டு கூலிசகாரர்கள் செத்து விழுந்து கிடந்தார்கள். கூனூருக்குப் போகிற மார்க்கத்திலே மூன்று பிரேதங்கள் விழுந்து கிடந்தன. இது அதிக குளிரினால் உண்டானது.

தெய்வீகவிபூதி விஷமானது.—மாயவரம் தாலுக்காவிலே ஒரு கிராமத்தில் ஒரு பரதேசியானவர் நாலுபேருக்கு வாயிற் போட்டுக்கொள்ளும்படி விபூதி கொடுத்தபின்பு, குடிப்பதற்குக் கொஞ்சங் கள்ளுங் கொடுத்தார். அவர்களில் வெறும்வயிற்றிலே விபூதியை உட்கொண்ட வொருவன் அரைமணிக்குள் வாய் கொமட்டிக்கொண்டு வயிறு நோகிறதென்று சொல்லி, ஒன்பதுமணி நேரத்திற்குள் இறந்துபோனான். மற்றை மூன்றுபேரும் வாந்தி முதலிய உபத்திரவமடைந்து, தகுந்தகாலத்தில் ஆசுபத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டதினால் பிழைத்தார்கள். இறந்துபோனவனுடைய வயிற்றைப் பரிசோதனை செய்ததில் பாஷாணம் கண்டெடுக்கப்பட்டது.

ஒருகிராம மணியக்காரரைக் கொலைசெய்ததற்காக சித்தூர் செஷன்ஜட்ஜியால் மரணதெண்டனை விதிக்கப்பட்ட முனியனென்பவன் செய்துகொண்ட அப்பீல் ஹைகோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டது. அந்த மணியக்காரர் தன்கிராமத்திலே ஒரு வீட்டை ஜப்திசெய்வதற்காகப் போய், இருபதுபெயரோடுகூட உட்கார்ந்து வேலை நடத்திக்கொண்டிருக்கையில், கைதி துணிபோர்த்துக்கொண்டு அவரருகிற்சென்று, பின்னால்நின்று, அவரைப் பிடரியில் வெட்டுகத்தியால் நோக்கி யொரு வெட்டுப்போட்டு ஓடிப்போய்விட்டான். அவர் கழுத்து வெகுவா யறுந்து தலைதொங்க மல்லாக்கவிழுந்து இறந்துபோனார். இனாம் கொடுப்பதாகச்சொல்லிச் சிலர் தன்னைத் தூண்டினதினால் அப்படி கொலைசெய்ததாகக் கைதி ஒப்புக்கொண்டான். மணியக்காரர்பேரில் கைதிக்குப் பகை யொன்றுமில்லாமல், வெகுமதிக்கு ஆசைப்பட்டு வேணுமென்று கொலைசெய்ததினால், ஜட்ஜிகள் அப்பீலைத் தள்ளிவிட்டு, மரணதெண்டனையை ஊர்ஜிதப்படுத்தினார்கள்.

கடப்பை செஷன் ஜட்ஜிபால் மரண தெண்டனை விதிக்கப்பட்ட மோதின் சாயபு என்பவனுடைய அப்பீல் விசாரணையிலே, பத்துவயது பிள்ளை பகல் போஜனத்துக்கு வராமையினால், தாய் தேடிப்பார்த்து, தன் பிள்ளை கைதியோடு கூடப்போனதாய்ச் சிலர் சொல்லுகிறார்களென்று கிராம முனிசீப்பினிடத்திலே முறையிட்டுக்கொள்ள, அவர் கைதியைப்பிடித்து விசாரிக்குமளவில் அவன் பிள்ளையை யிட்டுக்கொண்டு பழங்கள் பொறுக்கும்பொருட்டு ஒரு மலையண்டைபோய், கழுத்தில் அணி சுற்றி யிறுக்கிக் கொன்று, வெள்ளி நகைகளைப் பறித்துக்கொண்டு, ஒரு குகையில் எறிந்துவிட்டதாகத் தெரியவந்ததனால், அந்த பிரேதத்தைக் கண்டுபிடித்தெடுத்து, கழுத்தில் தனியுடனே கண்விழிகளும் நாக்கும் பிதுங்கி யிருக்கக்கண்டு, வைத்திய பரிசீலரும மரணத்தைப்பற்றி அவ்வித அபிப்பிராயமே கொடுத்திருக்கிறானாலும், அதினாலே ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் அந்தசங்கதியிலே தாங்கள் பிரவேசிக்க நியாயமில்லாமையால், அந்த மரணதெண்டனையை காயப்படுத்தினார்களென்று தெரியவருகிறது.

மைசூர் செஷன்ஜட்ஜி யவர்களால் மூன்றுபேருக்கு மரணதெண்டனை விதிக்கப்பட்டதின்பேரில், பிரதான கோர்ட்டிலே அப்பீல் விசாரணைசெய்யப்பட்டது. கவர்ன்மெண்டு அட்வோகேட்டானவர் செஷன்ஜட்ஜியும் அசெஸ்ஸர்களும் பிராதுபட்சத்து சாட்சிகளை நம்பாமையினாலே பிராதுபட்சத்தில் பேசுவதற்குத் தனக்கு ஆதாரமொன்று மில்லையென்று சொல்லிவிட்டார். ஆதலால், பிரதான கோர்ட்டார் செஷன் ஜட்ஜியும் அசெஸ்ஸர்களும் பிராதுபட்சத்து சாட்சிகளை நம்பாதிருந்து, அசெஸ்ஸர்கள் விடுதலைசெய்யவேண்டுமென்று சொல்லச்செய்யும், செஷன் ஜட்ஜி கொலை நடந்திருக்கக்கூடுமென்கிற நோக்கத்தினால் மூன்றுபேருக்கும் மரணதெண்டனை விதித்தது கூடாமையென்று சொல்லி, அந்த சிட்சையை ஒப்புக்கொள்ளவில்லை.

பர்மாவிலே கிழக்கு பக்கத்திலுள்ள சமஸ்தானங்கள் அமைதியா யிருக்கின்றன. இரத்தினக் கனிகளினாலே வரும்படி திருப்திகரமாகவே யிருக்கிறது. மெஸ்ஸர்ஸ் ஸ்திரீட்டர் கம்பெனியார் கொடுக்கிறதாகச் சொன்ன குத்தகைத்தொகைக்கு மிஞ்சுமாம்.

நியூகினியாவிலுள்ள ஹெர்கியுலிஸ் மலை 32,786 அடி உயரமிருக்கிறதென்று சொல்லிக்கொள்ளுகிறது உண்மையா யிருக்குமானால், இந்தியாவானது உலகத்திலுள்ள எல்லா மலைகளைப் பார்க்கினும் உன்னதமானமலையுடையதென்று இனிபுகழ்வதுகூடாமையென்று தோன்றுகிறது.

லண்டர்வுக்தும் பெல்காமுக்கு மத்தியி லோடுகிற வண்டித்தொடர்கள் - வெள்ளத்தினால மண்வேலை கெட்டுப்போயிருப்பதினாலே, மிகவும் தாறுமாறு யிருக்கிறது. சென்ற பன்னிரண்டுநாள் விடாது அதிக மழை பெய்தது.

பெல்காமிலும் அதைச் சுற்றிலும் நெய்யற்றொழிலாளிகள் சங்கட்டப்படுகிறார்கள். நாலாயிரம் கையெந்திரங்கள் நிறுத்திப்போடப்பட்டன. சுமார் பதினாயிரம் பேருக்கு வேலையில்லை. இது தொழிலாளிகளிடத்திலே வர்த்தகர்கள் அதிக வேலை வாங்குவதினாலே யுண்டாயிற்று.

மசோவாவிலே நிகழு மீ 13உ பிரதான மருந்துகிடங்கு வெடித்து பத்துபேர் மாண்டதாகவும், முப்பதுபேருக்குக் காயம்பட்டதாகவும் ஏடனிலிருந்து சமாச்சாரம் வந்ததாக சிம்லாவிலிருந்து பம்பாய் கேஜெட்டுக்கு வந்த டெலிகிராமினால் தெரியவருகிறது.

மதிராஸ்ஹார்பர் டிரஸ்டு போர்டார் பீசென்னும் இருப்புவாராவதிக்கு இருபக்கத்திலும் மும்மூன்றடி அகலப்படுத்தும்படி தீர்மானித்திருக்கிறார்கள். பீரின்பேரில் வியாபாரப் போக்குவரத்து மிகுதியா யிருப்பதால், அடிக்கடி ஜனங்களடர்த்தியினாலே அதிக தாமசமுண்டாகிறது.

ரிவினியூபோர்டார் மாடு குதிரைகளுக்கு நல்ல தீனி இன்னதென்று கண்டறியும்படி பல விடங்களி லிருந்து அறிக்கை வரவழைக்கிறார்கள். இந்தத் தீனிக்காக ஜில்லாக்களிலே வளருகிற வைக்கோல் முதலிய பல தினுசுகளையும் வரவழைத்து, பரிசோதித்து அறிக்கைபண்ணும்படி லோக்கல்கெமிக்கல் எக்ஜாமினருக்கு அனுப்பி யிருக்கிறார்கள்.

வில்லாபுரத்துக்குச் சமீபமான ஒரு கிராமத்தில் கொஞ்சகாலத்திற்கு முன்னே கன்னம் வைக்கப்பட்டது. அவ்விடத்திலே ஒருவன களவுசொத்து வைத்துக்கொண் டிருந்தான். அவனுடைய பெண்ஜாதி அந்த சங்கதியைக் கன்னம்வைக்கப்பட்ட வீட்டுக்காரனுக்குத் தெரிவித்தாள். அதைக்கணவன் அறிந்து, அவளுக்கும் தன் ஒரே பேற்றுப்பெண்ணுக்கும் தனக்கும் சாப்பாட்டிலே வெள்ளைப்பாஷாணம் கலந்தான். அந்தப்பெண் மாத்திரம் கொஞ்சநேரத்தில் இறந்துபோயிற்று. அவன்பேரில் இப்போது கொலைக்குற்றமும் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்த குற்றமும் பாரிக்கப்பட்டிருக்கிறது.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.